TAMIL MURASU 06 JUNE 2010

## அப்துல் கலாம் வழங்கினார்

# ஈஷா அறக்கட்டளைக்கு இந்திரா புரஸ்கார் விருது

புதுடெல்லி, ஜூன். 6- தமிழ்நாட்டில் உள்ள சத்குரு ஜக்கி வாசுதேவின் ஈஷா அறக்கட்டளைக்கு இந்திரா காந்தி பரியாவரன் புரஸ்கார் விருதை முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் வழங்கினார்:

உலக சுற்றுச் சூழல் தினத்தை யொட்டி நேற்று டெல்லியில் நடந்த நிகழ்ச்சியில் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் கலந்து கொண்டு சுற்றுச் சூழலை பாதுகாக்க சிறப்பாக பாடுபட்ட 3 அமைப்புகளுக்கு 2008ம் ஆண்டுக்கான விருதுகளை வழங்கினார்.

சுற்றுச் சூழல் மாசுபடுவதை தடுக்கவும் நீடித்த வாழ்க்கைக்கு வழிகாட்டவும் அரும் பணியாற்றியதற்காக இந்திரா காந்தி பரியாவரன் புரஸ்கார் விருது தமிழ்நாட்டில் உள்ள ஈஷா அறக்கட்டளைக்கு வழங்கப்பட்டது. இந்த அறக்கட்டளை சத்குரு ஜக்கி வாசுதேவ் நிறுவியது ஆகும். இந்த விருதில் ரூ. 5 லட்சம் ரொக்கம், வெள்ளித்தாமரை, மற்றும் பாராட்டு பத்திரம் அடங்கும். ஈ.கே. ஜானகி அம்மாள் தேசிய விருது, ஆண்டின் சுற்றுச் சூழல் விருது ஆகியவற்றையும் கலாம் வழங்கினார்.



டெல்லியில் நேற்று நடந்த நிகழ்ச்சியில் 'பசுமை சட்ட புத்தகத்தை' முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் (நடுவில்), மத்திய அமைச்சர் சல்மான் குர்ஷித் (இடது), இணை அமைச்சர் சச்சின் பைலட் ஆகியோர் வெளியிடுகின்றனர்.

விருதுகளை வழங்கி அவர் பேசும்போது, "இந்த பூமியின் இயக்கத்தில் ஒவ்வொரு உயிரினத்துக்கும், தாவரத்துக்கும் பங்கு இருக்கிறது.

இயற்கையில் இவை சங்கிலித் தொடர் போல் ஒன்றோடு ஒன்று பின்னி பிணைந்து இருக்கின்றன. அவற்றுக்கு இடையூறு விளைவித்தால் பெரும் நாசம் ஏற்படும். விலங்குகள், தாவரங்களின் சமநிலையான நீடித்த வளர்ச்சியால்தான் பூமியை காப்பாற்ற முடியும்" என்றார்.

நிகழ்ச்சியில் மத்திய சுற்றுச்சூழல்துறை அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ் பங்கேற்க வில்லை. மாநிலங்களவை தேர்தலுக்கான அவரது வேட்பு பரிசீலனை நேற்று ஐதராபாத்தில் நடந்ததால் ஆந்திரா சென்று விட்டார். கம்பெனி விவகாரத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித், இணை அமைச்சர் சச்சின் பைலட் கலந்து கொண்டார்.